செய்தி வெளியீடு எண் : 295 நாள் : 24/5/11

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 24.5.2011

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் 24.5.2011 அன்றைய நிலவரப்படி 1058 மில்லியன் கன அடி ( 1.06 TMC ft.) தண்ணீர் இருப்பு உள்ளது. மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து பெருங்கல் கால்வாய் வழியாக இந்த ஆண்டின் (2011 – 2012) பாசன சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, 27.5.2011 முதல் மணிமுத்தாறு நீர்த்தேக்கத்திலிருந்து, கார் பருவ சாகுபடி பாசனத்திற்காக தேவைக்கேற்ப தண்ணீரை ஒழுங்குபடுத்தி மணிமுத்தாறு அணையின்கீழ் உள்ள பெருங்கால் கால்வாயில் (Perungal Channel) 105 நாட்களுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால் திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள 1258 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

Comp1/Water release